தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 9, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990 மார்ச் 23, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து''.

சினம் தோன்றாமல் காத்துக் கல்வி கற்று, அடக்கம் உடையவனாக இருக்க வல்லவனுடைய செவ்வியை அவனுடைய வழியில் சென்று அறம் பார்த்து இருக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

நரிமணத்தில் கிடைக்கும் கச்சா எண்ணெய்.

*5438 திரு. வ. முல்லைவேந்தன் :
திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காவேரிப் படுகை நரிமணத்தில் கிடைக்கும் கச்சா எண்ணெய்க்கு இவ்வரசு மத்திய அரசிடமிருந்து பெறும் பங்கீட்டுத் தொகை எவ்வளவு?

(ஆ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கச்சா எண்ணெய் உற்பத்தியில் மாநில அரசுக்கு பங்கீட்டுத் தொகை ஏதுமில்லை. ஆனால் எடுக்கப்படும் கச்சா எண்ணெய்க்கு, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கமிஷன் மாநில அரசுக்கு உரிமத்தொகை (Royalty) செலுத்துகிறது இது டன் ஒன்றுக்கு ரூ. 192 ஆகும்.

திரு வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் படுகை, நரிமணத்திலே கிடைக்கும் கச்சா எண்ணெயைக் கொண்டு அந்த இடத்திலேயே உள்ள தஞ்சை மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற வகையிலும்,

தமிழ்நாட்டின் வளத்தைப் பெருக்குகிற வகையிலும், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றினை நிறுவிடவும், அங்கே கிடைக்கும் எரிவாயுவைக் கொண்டு, துணைத் தொழில்களைத் துவக்கிட வும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்வருவாரா? ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிமணத்தில் புதிதாக எண்ணெய் சுத்தி கரிப்பு ஆலை நிறுவிடக் கோரும் செயற்குறிப்பு ஏதும், மைய அரசின் பரிந்துரையில் இப்போது இல்லை எனத் தெரிய வருகிறது. என்றாலும்கூட, நரிமணம் உள்ளிட்ட தஞ்சை மாவட்டத்திலே உள்ள சில கிராமங்களிலே கிடைக்கும் கச்சா எண்ணெயைக் கொண்டு, ஆண்டு ஒன்றுக்கு 0.5 மில்லியன் டன் நிறுவு திறனுடன் ரூ. 110 கோடி செலவில் கச்சா பெட்ரோலியம் வடித்து எடுக்கும் ஆலை ஒன்றினை தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், பனங்குடி கிராமத்தில் நிறுவ, மைய அரசு நிறுவனமான ''சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம்'' முடிவெடுத்துள்ளது. இந்த ஆலை நிறுவ தேவைப்படும் 214.88 ஏக்கரா நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களை, நில எடுப்புச் சட்டம் அவசரப் பிரிவுகளின் கீழ் கையகப்படுத்தித் தருவதற்கு இந்த அரசின் நிர்வாக ஒப்புதலும் அளிக்கப்பட்டுள்ளது. மாசு கட்டுப்பாட்டிற்காக, மாநில சுற்றுப்புற சுகாதாரக் குழுவின் ஒப்புதலும் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது மைய அரசின் திட்ட முதலீட்டு வாரியத்தின் இறுதி முடிவுக்குக் காத்திருக்கிறது. அம்முடிவு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 36 மாதத்திற்குள் இந்த ஆலை செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காவிரிப்படுகை நரிமணத்தில் கிடைக்கும் கச்சா எண்ணெயின் அளவு எவ்வளவு? அதன் மூலம் நம்முடைய மாநில அரசுக்குக் கிடைக்கக்கூடிய தொகை எவ்வளவு? இதேபோல் நம்முடைய மாநிலத்தில் வேறு எங்காவது மாவட்டங்களில் இப்படிக் கச்சா எண்ணெய் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல் கச்சா எண்ணெய் தென்னாற்காடு மாவட்டம் புவனகிரி பகுதியிலே கிடைக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு விவரத்தைக் கேட்டார்கள். எவ்வளவு கச்சா எண்ணெய் கிடைக்கிறது என்று. 30-9-1989 வரையில் கிடைத்துள்ள கச்சா எண்ணெயின் அளவு 1,13,517 டன் ஆகும். எதிர்காலத்திலே இன்னும் இது அதிகமாக ஆகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ரூ. 192 வீதம் இதுவரையில் ரூ. 2,17,95,339 ராயல்டியாக வழங்கப்பட்டிருக்கிறது.

1990 மார்ச் 23]

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையில் சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்தும் எண்ணம் இவ்வரசுக்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது குறித்து விவரமாக திரு. முல்லைவேந்தன் கேள்விக்குப் பதில் அளித்து இருக்கிறேன்.

9-05 மணி

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிமணத்தில் பெட்ரோல் கிடைப்பது போல, எரிவாயுவும் கிடைக்கின்றது. அதையாவது முழுமையாக, தமிழகத்திற்குப் பயன்படுத்தி, அதைக்கொண்டு சில தொழிற்சாலைகளை அமைக்க வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அதைச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இயற்கை எரிவாயுவைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான டர்பைன்களை அமைக்கலாம். உரம் மற்றும் பெட்ரோலிய, இரசாயனத் தொழில்களில் இடுபொருட்களாகப் பயன்படுத்தலாம். மற்றும் சில தொழில்களில் இயற்கை வாயுவை எரிபொருளாகப் பயன்படுத்த முடியும். இது குறித்து என்னுடைய தலைமையில் 16-12-1989 அன்று நடைபெற்ற தொலைநோக்கு முக்கியத்துவத் திட்டக் கூட்டத்தில் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்திட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, காவிரி நதிப் படுகையிலே கிடைக்கும் இயற்கை எரிவாயுவைக் கொண்டு சில மின் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு மின் வாரியம் உத்தேசித்துள்ளது.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை எடுக்கப்பட்ட கச்சா எண்ணெய்க்குக் கிடைத்திருக்கும் ராயல்ட்டி தொகையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள். அதனை உயர்த்திக் கேட்கும் எண்ணம் அரசிற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்போது அரசு அதனை மேலும் உயர்த்தி 436 ரூபாயாகத் தரவேண்டுமென்று வலியுறுத்தி வருகிறது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது காவிரிப் படுகையிலே கிடைக்கும் கச்சா எண்ணெய் சம்பந்தப்பட்ட கேள்வியாக இருந்தாலும்,

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்வது, பெரியார் மாவட்டத்திலே என்னுடைய தொகுதியைச் சேர்ந்த.......(மணியடிக்கப்பெற்றது).

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடைக்கின்ற எண்ணெய் பெரும்பாலும் நன்னிலம் பகுதியைச் சேர்ந்ததாக இருக்கிறது. அப்படி எண்ணெய் எடுக்கின்ற நேரத்தில் அவர்கள் கொண்டு வருகின்ற வண்டி, வாகனங்கள் மிகக் கன ரகமாக இருக்கின்றன. கிராமப் புறங்களில் செல்கிற நேரத்தில், கிராமப்புறச் சாலைகள் மிக அதிகமாகப் பழுதுபட்டு விடுகின்றன. எனவே, கிடைக்கின்ற ராயல்ட்டியில் அந்த ஒன்றியங்களுக்கு உரிய நிதி, ஒரு விழுக்காடு விகிதம் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அரசிற்குப் பல்வேறு வகையிலே வருகின்ற வருமானங்களைக் கொண்டு, சாலை பழுது பார்த்தல் போன்ற கிராம நலத் திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிமணம் போன்ற பகுதிகளில் எடுக்கின்ற கச்சா எண்ணெய்கள், லாரி, டிரக்கு போன்ற வாகனங்களால் சென்னைக்கு எடுத்து வரப்படுகின்றன. இப்படி எடுத்து வருகிறபோது, அந்தப் பகுதியில் இருக்கின்ற பாலங்கள் எல்லாம் மிகவும் பழுதடைந்து விடுகின்றன. சமீபத்திலேகூட, தரங்கம்பாடி அருகிலுள்ள பாலம் பல பெரிய டிரக்குகள் வந்து பல இடிபாடுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் தடுப்பதற்கு—மயிலாடுதுறையிலிருந்து தரங்கம்பாடி வரை ரயில் நிறுத்தப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன—தரங்கம்பாடியிலிருந்து ரயில் மூலமாக அந்தக் கச்சா எண்ணெய்களை சென்னைக்கு எடுத்துக் கொண்டு வர அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது எண்ணெய் கிடைக்கின்ற அளவைப் பொறுத்து, அதை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் அவ்வப்போது விரிவுபடுத்தப்படும்.

தந்தை யார் என்பதை அறிவதற்கான சோதனைக் கூடம்

*6614 திரு. வே. தங்கபாண்டியன் ;

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு தடய அறிவியல் துறையில் 'Paternity Testing Centre' என்ற தனி அமைப்பு ஒன்றை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?